[23rd January 1964

திரு. பி. கே. மூக்கையா தேவர் : அவர்கள் யோசனை மட்டும் சொல்வார்களா ? அந்த யோசனையை அரசாங்கம் அப்படியே ஏற்றுக்கொள்ளுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : It is a hypothetical question.

அரிசன மாணவர்களுக்கு இலவச உடை

*76 **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் அரிசனநல பள்ளிகளில் படிக்கும் பெண் குழந்தைகளுக்கு இலவசமாக துணிகள் கொடுப்பது போல ஆண் குழந்தைகளுக்கும் துணிகள் கொடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : No. உத்தேசமில்லை.

திரு. செ. மாதவன் : ஹரிஜன மாணவர்களுக்குப் பொதுவாக உடை வழங்கவேண்டுமென்று மத்திய சர்க்கார் ஏதாவது யோசனை தெரிவித்தார்களா ? அதுசம்பந்தமாக மத்திய சர்க்கார் உதவி ஏதேனும் நமது அரசாங்கத்திற்குக் கிடைக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த திட்டம் மத்திய சர்க்காரின் நிதி உதவியைக் கொண்டுதான் நடைபெறுகிறது.

புலவர் கா. கோவிந்தன் : ஹரிஜன மாணவிகளைவிட ஹரிஜன மாணவர்கள் முன்னேறிவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. அவர்களும் பின்தங்கிய நிலையில்தான் இருக்கிறார்கள். மேலும் பெண்களைவிட ஆண்களுக்கு உடைச் செலவு குறைவாகத்தான் இருக்கும். ஆகவே ஆண் மாணவர்களுக்கும் கூட ஏன் உடை கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : முன்பு மாணவனாக இருந்தாலும், மாணவியாக இருந்தாலும் இரண்டுபேருக்கும் 12 ரூபாய்க்குள் இரண்டு செட் உடை வழங்குவது என்றுதான் இருந்தது. தேசீய நெருக்கடி காரணமாக இப்போது மாணவர்களுக்கு உடை வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக ஆகக்கூடிய செலவில் மத்திய சர்க்கார் எவ்வளவு கொடுக்கிறது ? நமது மாநில சர்க்கார் எவ்வளவு செலவு செய்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : 12-9-1960-இல் ஹரிஜன இலாகா டைரக்டர் கேட்ட தொகை 2.97 லட்சம். அப்படியே செலவு செய்திருக்கிறார்கள். 1961-இல் 3 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் செலவு அதிகமாக ஆகியிருக்கிறது. ஹரிஜனப் பள்ளிகளில் படிக்கும் ஹரிஜன மாணவிகள் மட்டும் இல்லை, மற்ற சாதி ஏழை மாணவிகளுக்கும் உடை வழங்கப்பட்டால் எழுபதாயிரத்து

இருநூறு ரூபாய் கூடுதலாகச் செலவு செய்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் க்ராண்ட்-இன்-எய்ட் திட்டப்படி நடக்கிறது. மத்திய சர்க்காரும் உதவி செய்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : ஆண் மாணவர்களுக்கு உடை கொடுப்பது போல பெண்களுக்கும் கொடுக்கவேண்டும் என்ற இன்றியமையை சர்க்கார் உணர்வதினாலே தேசிய நெருக்கடி தீர்ந்த பிற்பாடு கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்போது அதுபற்றி பரிசிலனை செய்யப் படும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, திரு. மாதவன் அவர்கள் கேட்ட கேள்வி, இந்தத் திட்டத்தில் மத்திய சர்க்காரின் பங்கு எவ்வளவு, மாநில சர்க்காரின் பங்கு எவ்வளவு என்பதாகும். அதற்கு கனம் அமைச்சர் பதில் சொல்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : கிராண்ட்-இன்-எய்ட் ஸ்கீம் என்றால் மத்திய சர்க்கார் பங்கு 50 சத விகிதம். மாநில சர்க்கார் பங்கு 50 சத விகிதம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஹரிஜனப் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளுக்கு மட்டும் இந்தச் சலுகை கிடைக்கிறது. மற்ற பள்ளிகளில் படிக்கும் ஹரிஜன மாணவிகளுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதர பாடசாலையில் படிக்கிற குழந்தைகளுக்கு கொடுப்பதாக உத்தேசம் இல்லை.

தீ அணைப்பு நிலையங்கள்

*** 77 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் உள்ள மேஜர் பஞ்சாயத்து நகரங்களில் தீ அணைக்கும் நிலையங்கள் திறப்பதற்கு உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால், எந்தெந்த நகரங்களில் அந்நிலையங்கள் திறக்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) தஞ்சாவூர் மாவட்டத்தில் மாயவரம், கும்பகோணம், திருவாரூர், தஞ்சாவூர், மன்னார்குடி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் ஏற்கனவே ஆறு தீயணைப்புப் படை நிலையங்கள் உள்ளன. வேறு எந்தெந்த இடங்களில் தீயணைப்புப் படை நிலையங்களை நிறுவவேண்டும் என்று அரசாங்கம் பட்டியல் தயார் செய்துள்ளதோ அந்த இடங்களில்